செய்தி வெளியீடு எண். 33-2017 நாள்: 21.01.2017

# விழுப்புரம் மாவட்டத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் 26.01.2017 குடியரசு தினத்தன்று கிராம சபை கூட்டம் நடைபெறும் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

*****

விழுப்புரம் மாவட்டத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் 26.01.2017 குடியரசு தினத்தன்று கிராம சபை கூட்டம் நடைபெறும் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் ஆகஸ்ட் 2016 முதல் டிசம்பர் 2016 வரை கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் நிதி செலவின விபரங்கள் குறித்து விவாதித்தல், (2017-18), கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்ட அறிக்கை (2017-18), சுகாதாரம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட பணிகள் விபரம், பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டம்-II, அம்மா பூங்கா மற்றும் அம்மா உடற் பயிற்சி கூடம், தாய் திட்டம் 2016-17, ஊராட்சி பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு திட்டப் பணிகள் முன்னேற்றம் மற்றும் நிதி செலவின விபரங்கள் குறித்து விவாதித்தல், மகளிர் திட்டம், (தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்), புதுவாழ்வு திட்டங்கள், கொசுக்கள் மூலம் பரவும் டெங்குக் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல், பொது விநியோக திட்டம், வெளிநாடு வாழ் தமிழர்கள் நலன் மற்றும் வெளிநாட்டில் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை பொது மக்களுக்கு தெரியப்படுத்துதல், 30.01.2017 அன்று தொழுநோய் விழிப்புணர்வு சிறப்பு கிராம சபை கூட்டம் நடத்திட தீர்மானம் நிறைவேற்றுதல் தொடர்பான பொருள்கள் மீது விவாதிக்கப்படும்.

எனவே, இக்கிராம சபை கூட்டத்தில் மாற்றுத் திறனாளிகள், மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள் மற்றும் அந்தந்த கிராமத்தினை சார்ந்த பொது மக்கள் கலந்து கொண்டு தங்கள் கிராமத்திற்கு/ பகுதிக்கு வேண்டிய பொது தேவைகள் மற்றும் கருத்தினை தெரிவிக்க வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.